உ

மீனாக்ஷி துணை.

நஷ்டசிந்தனை என்னும்

# களவுகாணும் சாஸ்திரம்.

இஃது

அநேகமணிநூல் மார்க்கங்களுக்கிணங்க

புதுவை

## நாராயணதாசரால்

தொகுத்தியற்றப்பட்டு,

திருப்போரூர்

## டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கேள்டன் அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன்விலை] *Registered Copy Right.* [அணா.

1916.

(1)
தமிழ் 4194
General 29007
1973
(1)

# ரிஜிஸ்தர் அறிவிப்பு

இதனால் சகலருக்குந் தெரிவிப்பது யாதெனில், 1867 வது வருஷத்திய 25 வது ஆக்டின் 20 வது பிரிவின் 6 வது விதியின் பிரகாரம், இந்நூலை இங்கிலீஷ் இலாகவிலும், பிராஞ்சு இலாகாவிலும், காரைக்காலிலும் காப்பிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றது. ஆகையால் இந்நூலுக்குடையவராகிய மேஸர்ஸ் டி. கோபால் அண்டு கம்பெனியாரவர்களின் உத்திரவின்றி இதை வேறு பாஷையில் மொழி பெயர்த்தாவது அல்லது இதில் கண்டிருக்கிற பாகங்களி லொன்றை யாவது ஒருவரும் அச்சிடலாகாது. அப்படி அச்சிட்டால் அதனால் உண்டாகும் நஷ்டத்தை வசூல் செய்யப்படும்.

---


## விளம்பரம்.

இப்புத்தகமாவது இன்னும் இதரமான புத்தகங்களாவது அவிழ்தங்களாவது ரப்பர் ஸ்டாம்புகளாவது தேவையானவர்கள் அடியில் கண்டிருக்கும் கம்பெனியா ரவர்களுக்கெழுதி பெற்றுக்கொள்ளலாம். பெரிய கேட்லாக் தேவையானவர்களுக்கு இனமாய் அனுப்பப்படும்.

எமது மேல்விலாசம்,

**டி. கோபால் அண்டு கோ.,**

கோல்டன் பிரஸ், சூளை போஸ்டு. மதராஸ்.



விநாயகர்.

41 94.

## களவுகாணும்

# இரகசியம்.

பூசைஅறை அல்லது சுத்தமானயிடத்தில் வட்டமாக மெழுகி கோலமிட்டு மஞ்சளினால் பிள்ளையார் பிடித்து வைத்து அறுகுசூட்டி தூபதீபநைவேத்தியமியற்றி **5-6**-வயதுடைய சிறுகுழந்தைகளிடத்தில் யாதாமொரு புட்பத்தைக்கொடுத்து இந்த சக்கரத்திலுள்ள எண்களைத் தொடச்சொல்லி அந்த எண்ணை குறித்துக்கொண்டு மறுபடியும் தொடச்சொல்லி ஆக இருவிசையும் தொட்ட நெம்பர்களை முறையே குறித்துக்கொண்டு அதுபோலுள்ள நெம்பருக்குடைய விஷயத்தை இந்நூல் வருமாறு தெரிந்துக்கொள்ளவும்.

தெய்வமேதுணை.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 12 | 11 | 10 | 9 | 8 |
| 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 12 | 11 | 10 | 9 | 8 | 7 | 6 | 5 |
| 4 | 3 | 2 | 1 | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 12 | 11 |
| 10 | 9 | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 |
| 1 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 12 | 11 | 10 | 9 | 8 |
| 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 12 | 11 | 10 | 9 | 8 | 7 | 6 | 5 |
| 4 | 3 | 2 | 1 | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | | |

3

உ

மீனும்பாள்துணை.

## நஷ்டசிந்தனை

என்னும்

# களவுகாணும் சாஸ்திரம்.

க. க. நெம்பர்வரில் காணுமற் போனவஸ்து குங்குமநிறம். உதயருசி மெஷமாகில் தன் சொந்தபொருளென்றும், முதற்பாதமாகில் மாதியினுல் தன்னிடமே யிருக்குமென்றும். மேஷமிரண்டாம் பாதமாகில் அப்பொருள் சொந்த மனிதன் அபகரித்தானென்றும். மேஷம் மூன்றும் பாதமாகில் சோரர்களால் அபகரிக்கப்பட்டதென்றும். நான்காம் பாதமாகில் தன் வீட்டில் சிகப்பு நிறமுடைய ஸ்திரீயினுல் அபகரிக்கப்பட்டதென்றும் தெரிந்துக் கொள்ளவும்

க உ. நெம்பர்வரில் கைதப்பிப்போன பொருள் வெண்மை நிறமுள்ளதென்றும், உதயருசி ரிஷபமாகில் அன்னியர் பொருளென்றும். இரண்டாம் பாதமுதிக்கில் தன் இரத்த கலப்பென்றும், மூன்றும் பாதமாகில் நேசர்களென்றும், நான்காம்பாதமாகில் அபாரித்தவர் சோரர்களென்றும் தெரிந்துக்கொள்ளவும்.

க. ௩. நெம்பர்வரில் அவ்வஸ்து எலுமிச்சம்பழத்தை யொத்தநிறம். உதயருசி மிதுனமாகில் தனக்கு மிகவும் பிரியமுள்ள வனிதையென்றும், அவ்வனிதையை அன்னியமாது போதனைசெய்து அழைத்துப்போய் ஒளித்துவைத்திருப்பதாகவும், இரண்டாம்பாதமாகில் தன்னினத்தாரே செய்ததாயும், மூன்றும் பாதமாகில் அன்னிய புருஷனென்றும், நான்காம்பாதமாகில் தானே சென்றோர் புருடனிடமிருப்பதாகவும் உணர்க.

க. ௪. நெம்பர்வரில் அப்பொருள் பசுமைநிறம். உதயருசி கடகமாகில் பொன்னைச்சேர்ந்த ஆபரணங்களும், சொர்ன நாணயங்களுமாம். இரண்டாம் பாதமாகில் இதை யபகரித்தவன் சமனிறமும் குள்ளமுமாயிருப்பன். மூன்றும் பாதமாகில் அன்னியதேசத்திலிருந்து தன்னிடம் ஏதோ ஒருகாரியார்த்தமாய் வந்து வீட்டிலிருந்தவன். நான்காம்பாதமாகில் தன் சொந்த மனிதனே அபகரித்துப் பூமியில் புதைத்துவைத்திருக்கிறுன் பிரயத்தினப்படக் கிடைக்

க. ரு. நெம்பர்வரில் வைரம்வைத்திழைத்த ஆபரணம். உதயராசி சிங்கமாகில் தன்சொந்தமும், அன்னியர்கள் பொருளுடன் சேர்த்துவைத்தும். இரண்டாம்பாதமாகில் தன் சகோதரனும், மூன்றும்பாதமாகில் செவந்த நிறமுடைய புருஷன் கைப்பத்தி ஊருக்கு வடக்கே நதிக்கரையில் புதைத்துவைத்திருக்கின்றான். நான்காம்பாதமாகில் மாதுரு வர்க்கத்தாரில் பெண்ணொருவள் அபகரித்து அடுக்குப்பானையில் ஒளித்துவைத்திருக்கின்றாள். உடனே கிடைக்குமென்றுணரவும்.

க. சு. நெம்பர்வரில் செகப்பு நிறமுடைய ஸ்திரீரத்தினம் (ஸ்ரீரத்தினமென்றால் கெம்புயிழைத்ததும் கட்டமுமாகிய ஆபரணம்) உதயராசி கன்னியாகில் இன்னகையை அணிந்துகொண்டுபோன பெண்ணின் அசட்டையினால் மார்க்கத்தில் விழுந்து போயிற்று. பூமியில் விழுந்து கிடந்தப் பணியை ஒரு மனிதன் கைப்பற்றி விக்கிறையத்துக்குக் கொண்டுவருவான் அப்போது ராஜாங்கத்தாரால் உனக்குலபிக்கும். இரண்டாம்பாதமாகில் விழுந்த யிடத்தில் தேட அகப்படும். மூன்றும்பாதமாகில் அன்னகைப் போனதுமின்றி பொருள் நஷ்டமும், தேகப்பிரையாசையும் உண்டாகும். மூன்றும்பாதமாகில் அப்பொருள் ஒருமாதம் அல்லது ஒருபக்ஷத்தில் கிடைக்கும். நான்காம்பாதமாகில் மேற்குத்திக்கில் நஷ்டமும், கிழக்குத்திக்கில் ஓர் பெண்மூலமாய்க் கிடைக்கும். நான்காம்பாதமாகில் ஒருவாரம் அல்லது ஒருமாதத்திற்குள்ளகப்படும்.

க, எ. நெம்பர்வரில் பச்சைநிறம் (என்றால் நற்பச்சை) உதயராசி துலாமாகில் இது உயர்ந்த ஆபரணத்தின் நடுநாயகம். இரண்டாம்பாதமாகில் இவ்வஸ்துவை வியாபாரியொருவன் அபகரித்தான். அது கிடைப்பது மெத்த அருமை. மூன்றும்பாதமாகில் தன்னிடத்திலிருக்கும் குமஸ்தாவென்றும், தக்க பிரயத்தனஞ்செய்யக் கிடைக்கும். நான்காம்பாதமாகில் வீட்டு வேலைக்காரி அபகரித்துக்கொண்டுபோய் கணவனிடத்தில் கொடுத்தாள், அவன் அதையோர் சிமிளில் போட்டுப் பெட்டிக்குள் வைத்திருக்கின்றான் உடனே கிடைக்கும்.

க. அ. நெம்பர்வரில் சூத்திரம் ஓடுகின்ற டாலுடைய வைடூரியம். உதயராசி விருச்சிகமாகில் இதைக்கவர்ந்தவன் கருப்புநிறமான உயரத்தையுடையவன் ராஜன்மூலமாய் பொருள் சிலவுசெய்யக் கைக்குவரும். இரண்டாம்பாதமாகில் மாதுருவர்க்கத்தாரால் அபகரிக்கப்பட்டு இத்துடன் சில ஆபரணங்களும் பூமியில் புதைத்துவைக்கப்பட்டிருக்கின்றது இதற்குத்தக்க பிரயத்தினஞ்செய்யக்கிடைக்கும். மூன்றும்பாதமாகில் கைப்பத்தின மனிதன் வல்வாயனுதலால் மீண்டும் பொருள்கிடைப்பது அருமை. நான்காம்பாதமாகில் மாநிறமும் சம உயரமுமுடைய விரோதியினிடம் அகப்பட்டுக்கொண்டதலால் அது மெத்த சிரமத்தின் பேரில் கிடைக்குமென்று உணரவும்.

க. கூ. நெம்பர்வரில் கோமேதகம் உதயராசி தனுசாகில் இதை அபகரித்[illegible]ப்பெண் உடனே கிடைக்கும். இரண்டாமபாதமாகில் வலுவு மிகுந்த

ராஜ உத்தியோகஸ்தன் எத்தனைப் பிரயத்தினஞ் செய்யினும் நஷ்டமே கவிர கைகூடிவரமாட்டாது. மூன்றாம்பாதமாகில் தன் வீட்டிலுள்ள கன்னிகைப்பெண்ணிடமிருக்கின்றது, அது எளிதில் கைக்கு வரும். நான்காம் பாதமாகில் சினேகிதனிடமிருக்கின்றது. தக்க பிரயத்தினஞ் செய்யக்கிடைக்கும்.

க. ய. நெம்பர்வரில் நீல நிறமுடைய வஸ்து. உதயராசி மகரமாகில் தண்ணீர்த்துறையில் வைத்து கைதப்பிப்போய் விட்டது. இதை கருப்புநிறமுள்ள நெட்டைக்காலனும், முகத்தில் அடையாளக்குறியுமுள்ள ஒரு மனிதன் அபகரித்து ஜலத்திற்குள் ஒளித்து வைத்திருக்கின்றான். இது கிடைக்கமாட்டாது. இரண்டாம்பாதமாகில் தன் இரத்தக்கலப்புடைய ஒரு பையன் அபகரித்து ஜலம் நிரம்பிய பித்தளைச்சாலில் ஒளித்துவைத்திருக்கின்றான். இது கூடிய சீக்கிரத்தில் கிடைக்கும். மூன்றாம்பாதமாகில் தன் பந்துக்களில் கருப்புநிறமுடையவனும் அதிக நெட்டையுங் குட்டையுமில்லாத சம உயரமுடையவனுமாகிய ஒருவன் ஓர் மரத்தடியில் புதைத்துவைத்திருக்கின்றான். இதற்குத்தக்க பிரயத்தினஞ்செய்ய கைக்குவரும். நான்காம்பாதமாகில் தன் கடைவே ஜலத்தில் விழுந்தது இது கிடைக்கமாட்டாது.

க. கக. நெம்பர்வரில் செப்புப்பாத்திரம். உதயராசி கும்பமாகில் இதை தன்வீட்டு வேலைக்காரன் அபகரித்துப் பத்திரப்படுத்தி வைத்திருக்கின்றான். இதற்கு உடனே பிரயத்தினப்பட்டால் கிடைக்கும், இல்லாவிட்டால் வெளிதாண்டி வேறு கிராமத்தில் விற்பனையான பின்பு கிடைப்பதரிது. இரண்டாம்பாதமாகில் சொந்த மனிதரால் அபகரித்து குதுவை வைக்கப்பட்டது, முயற்சிசெய்யில் கிட்டும். மூன்றாம்பாதமாகில் தாயாதி வர்க்கத்திலோர் பெண் அபகரித்துத் தன்பெட்டியி லடக்கஞ் செய்திருக்கின்றாள். இதற்குப் பிரயத்தினஞ்செய்தபோதிலும் பிரமாதமாகும். கைகூடிவரமாட்டாது. நான்காம்பாதமாகில் திருடனால் அபகரிக்கப்பட்டது கிடைக்கமாட்டாது.

க கஉ. நெம்பர்வரில் காணாமற்போன பாலன் உதயராசி மீனமாகில் அப்பாலன் கீழ்திக்கில் அன்னியமனிதரால் ஆதரிக்கப்பட்டு யிருக்கின்றான் இரண்டு நாளைக்குள் அகப்படுவான். இரண்டாம்பாதமாகில் சொந்த மனிதரிடம் அகப்பட்டு அவர்களாதரணையிலிருக்கின்றான். உடனே கிடைப்பான். மூன்றாம் பாதமாகில் போலீசாரிடம் அகப்பட்டு வடதிக்கிலிருக்கின்றான். நான்காம்பாதமாகில் ஒரு மனிதன் அழைத்துக்கொண்டுபோய் குழந்தை யணிந்திருந்த ஆபரணத்தை கவர்ந்துகொண்டு மேற்குத்திக்கில் விட்டுவிட்டுப் போயினன். அப்பாலகன் மார்க்கமே வந்து நேசரா லழைத்துவரப்படுவான்.

உ. க. நெம்பர்வரில் செம்மறியாடு உதயராசி மேஷமாகில் தன் சொந்த மனிதன் அபகரித்துக் கொன்று விக்கிரயஞ் செய்துவிட்டான். இரண்டாம்பாதமாகில் பசுவு அல்லது எருது இது தாயாதிகளால் பிடிப்பட்டு மேற்குத்திக்கு சந்தையில் விக்கிறயஞ்செய்யப்பட்டது. இது மூன்றுமாதத்தில் கிடைக்கு

மூன்றாம்பாதமாகில் செகப்புவஸ்திரம் அல்லது செகப்ப சேலை இது சோரன் அபகரித்து விக்கிரயத்துக்குக் கொண்டுவர அப்போதகப்படும். நான்காம்பாதமாகில் செம்மரம் அல்லது தூண் இதை கருத்த நிறமுடைய குடியானவன் அபரித்துத்தடாகத்தில் போட்டுவைத்திருக்கின்றான், இரண்டுமாதத்தில்கிடைக்கும்

உ. உ. நெம்பர்வரில் வெள்ளைப்பசு அல்லது வெள்ளையெருது உதயராசி ரிஷபமாகில் இது தன்னூருக்கு வடக்கேயுள்ள கிராமத்தின் பட்டியிலடைக்கப்பட்டிருக்கின்றது. இரண்டாம்பாதமாகில் வெள்ளாடு அல்லது போத்து இது வயலில்மேயக் குடியானவன் பிடித்துக் கட்டிவைத்திருக்கின்றான். மூன்றாம் பாதமாகில் வெள்ளைவஸ்திரத்தினால் கட்டப்பட்ட பலவித உடுப்புகள் நிறைந்த மூட்டை, இதை இரண்டுமனிதரால் அபகரிக்கப்பட்டது. இதில் சிலதுகிடைக்கும். நான்காம்பாதமாகில் வெள்ளைக்குதிரை மேய்ந்துகொண்டேபோய் குட்டிச் சுவரின் மறைப்பில் படுத்திருக்கின்றது.

உ. ௩. நெம்பர்வரில் அழகில் மிகுந்த புருடனும் பெண்ணும் உதயராசி மிதுனமாகில் இருண்டு அன்னியோன்னியமாகக் கலந்து, தென்திக்கை நாடிச் சென்று நிருதிமூலையிலுள்ள ஓர் கிருகத்தில் சுகமேயிருக்கின்றார்கள். இரண்டாம்பாதமாகில் புருடன் காமயிச்சை யதிகரித்து தனக்கு மெத்த நேசமாகி வனிதையிடம் சென்று கலவிசெய்து அலண்டு நித்திரைசெய்த விடத்தில் பொழுது விடிந்து போனபடியால் அவ்வனிதை வீட்டிலுள்ள பெரியோர்கள் அறிந்தால் மோசம் வருமென்று எண்ணி புருடனைப் பாயோடுஞ்சேர்த்து ஒளித்துவைத்திருக்கின்றாள், இராத்திரி மூன்றுமணி சுமாருக்கு வந்துசேருவான். மூன்றாம் பாதமாகில் பசு பொலிப்பினால் பிரமையடைந்து ஓர்காட்டில் எருதுடன் கலந்து மேய்ந்துக் கொண்டிருக்கின்றது, தென்கிழக்கிலிருந்தகப்படும். நான்காம்பாதமாகில் ஊருக்குச்சென்ற மனிதன் அங்கோர் பெண்ணுடன் கூடியிருக்க, அதைப் பெண்ணுக்குடையவர்கள் கண்டு அவனைப் பிடித்து ராஜாங்கத்தாரிடம் ஒப்புவித்து விசாரணையில் அபராதமும் சிக்ஷையும் அடைந்து நான்கு மாதத்தில் வந்து சேருவான்.

உ. ச. நெம்பர்வரில் களத்தில் சேர்க்கப்பட்டு வைத்த நெல்களவு. உதயராசி கடகமாகில் தன்னிடமிருக்கும் பண்ணைக் காரனும் அவனுக்குச் சினேகிதரான மூவர் ஆக நால்வருஞ் சேர்ந்து நெல் களவு செய்தார்கள். உடனே தக்கப் பிரயத்தினஞ் செய்தால் அணுவளவுஞ் சிதராமற் கிடைக்கும். இரண்டாம் பாதமாகில் சவரன், இது தன்னாலே மறதியாய் வைக்கப்பட்ட யிடத்திலேயே நன்றாய் ஆராய்ந்து பார்க்கில் கிடைக்கும். மூன்றாம் பாதமாகில் பித்தளைச்சாமான் இதுவீட்டில் வேலைசெய்யும் வேலைக்காரன் அபகரித்து ஒளித்துவைத் திருக்கின்றான் மூன்று நாள் அல்லது மூன்று வாரத்தில் கிடைக்கும். நான்காம் பாதமாகில் மஞ்சள் சகலாத்து அல்லது மஞ்சள்பட்டு புடவை இதை தன் வீட்டிலுள்ள ஓர் விதவை ஸ்திரீ அபகரித்து தனக்குச் சோரநாயகனிடங் கொடுக்க அவன் இன்று மூன்று நாள் அல்லது மூன்று வாரத்திற்குள் வெளி

நாட்டிற்குக் கொண்டுபோய் வியாபாரஞ் செய்யுமிடத்தில் இராஜாங்கத்தாரால் பிடிக்கப்பட்டு அவர்கள் மூலமாய் கிடைக்கும்.

உ. ரு. நெம்பர்வரில் வெள்ளைப்பட்டு நார்மடி அல்லது, வெள்ளைப் பட்டுச் சேலை, உதையராசி சிங்கமாகில் குடும்பத்திலுள்ள மானிறமுடைய பெண்பிள்ளை அபகரித்துப் பெட்டியில் அடக்கஞ்செய்து வைத்திருக்கின்றாள். தக்க முயற்சிசெய்ய உடனே கிடைக்கும். அசட்டையாய் காலதாமதஞ் செய்திலுந் தால் மெத்த சிரமத்தினால் கைகூடி வரும். இரண்டாம் பாதமாகில் புஷ்பராகக் கல்லிழைத்த ஆபரணம் இதை தாயாதி வர்க்கத்தாரில் செகப்பு நிறம் நெட்டையுமான மனிதன் அபகரித்து ஊருக்கு அக்கினி மூலையில் ஓர் மரத்தடியில் புதைத்து வைத்திருக்கின்றான். தக்க முயற்சி செய்ய ஒரு பக்ஷத்தில் கிடைக்கும் மூன்றாம் பாதமாகில் வெள்ளி நகைகள் வகையரா. இதை நம்பிக்கையுள்ள குமஸ்தா நாளா வட்டத்தில் ஒவ்வொன்றாக வெடுத்துக் கொண்டுபோய் உருக்கி விக்கிரயஞ் செய்து விட்டான் அகப்படாது. நான்காம் பாதமாகில் வெள்ளிசெடியாரம் இது கருப்பு நிறமும் குள்ளமும் வல்வாயனுமான புருஷன் அபகரித்து பத்திரப் படுத்தி யிருக்கின்றான். இதற்காக எத்தனை முயற்சிசெய்யினுங் கைப்பொருள் நஷ்டமே யன்றி களவுபோன பொருள் கிட்டமாட்டாது.

உ. சு. நெம்பர்வரில் செகப்பு பட்டு நார்மடி, அல்லது செகப்பு பட்டுச் சேலை. உதையராசி கன்னியாகில் தன் சகோதரி ஒளித்து வைத்து மாமியார் வீட்டிற்குப் போகும்போது எடுத்துக்கொண்டுபோக் யெண்ணியிருக்கின்றாள் இதற்கு மந்திரஞ்செய்து கோழி முட்டையை விடுகிறேன் அதனால் யெடுத்தவர்கள் வயிறுப்பி இரத்த ரத்தமாய்ப் பேதியாகுமென்று பயமுறுத்த ஒரு வாரத்தில் கிடைக்கும். இரண்டாம் பாதமாகில், செகப்பு சாலுவை அல்லது செகப்புசகலாத்து இதை ஒத்தைக்கால் நொண்டியும் சுபாவத்திலே துஷ்டனுமானகுள்ளன் அபகரித்து வைத்திருக்கின்றான். இக்குறிப்பை யுணர்ந்து அவனுக்குத்தக்க முயற்சிசெய்யில் கஷ்டத்தின்பேரில் கிடைக்கும். மூன்றாம் பாதமாகில், ரவைக்கெம்பு இதை ஒரு கன்னிகை யெடுத்து பத்திரம் பண்ணி யிருக்கின்றாள் இது கிடைக்க மாட்டாது. நான்காம் பாதமாகில் காசிக் கல்லிழைத்த கிலிட்டுநகை இதை யொரு மாது அபகரித்தாள் அவள் சொந்த பந்துவே முயற்சி செய்யக்கிடைக்கும்.

உ. எ. நெம்பர்வரில் மாந்தாளிப் பச்சை வைத்திழைத்த ஆபரணம். உதையராசி துலாமாகில் அதிக சிகப்பும் அதிக கருப்பு மில்லாத சமநிறமுடைய கைம் பெண் அபகரித்து பழங் கலத்தில் நிருதி மூலையில் வைத்திருக்கின்றாள் முயற்சி செய்யக் கிடைக்கும். இரண்டாம் பாதமாகில் பச்சை சாலுவை அல்லது பச்சை சகலாத்து இதை கருட்பும் உயரமுமுடைய ஒரைக் கண்ணன் அபகரித்தான் அவனிடமிருந்து இப்பொருள் கிடைப்பது வெகு கஷ்டமாகும். மூன்

ஞம் பாதமாகில் முகத்தில் வெள்ளைப் புள்ளியும் தேகம் சிகப்பு நிறமு முடைய குதிரை இது தெரிப்பட்டு வடதிக்கில் ஓராலயத்தின் மதிலோரத்தில் மேய்ந் துக்கொண்டிருக்கின்றது. நான்காம் பாதமாகில் பஞ்சவர்ணங்களால் எழுதிய சித்திரப் படம் மார்பில் மயிரில்லாத செகப்பு நிறமுடைய குள்ளன் அபகரித்து தன் பெரிய பெட்டியில் ஈசானிய திக்கில் வைத்திருக்கின்ருன் அது கிடைப் பது அருமையே.

உ. அ. நெம்பர்வரில் ஈய பாத்திரங்கள். உதயராசி விருச்சிகமாகில் மூன் ருெம் வீட்டுப் பெண்வந்து பேசிக் கொண்டிருந்து போகிறபோது களவு செய் துக் கொண்டு போயினுள் இது வருவது மெத்தவுங் கஷ்டம். இரண்டாம்பாத மாகில் பவழமாலை இதை தன் பந்து வர்க்கத்திற் சேர்ந்த பெண்பிள்ளை வெள் ளைப் பாவாடையும் மஞ்சள் ரவிக்கையுந் தரித்த குள்ளமாது அபகரித்தாள் இது ஆறுமாதத்திற்குள் போலீசார் மூலமாய்க் கிடைக்கும். மூன்ருெம் பாதமாகில் நல்லமுத்து அல்லது பங்காள முத்து சரம் இதைத் தன் வீட்டில் வேலைசெய்யும் ஊழியக்காரன் கவர்ந்து அதேவீட்டில் வாழை மரத்தடியில் புதைத்து வைத்தி ருக்கின்ருன் இது உடனே கிடைக்கும். நான்காம் பாதமாகில் காரீயம் அல்ல து நாகம் இதுகளாற்செய்த பாத்திரங்கள் இது கைமறதியாய் பழங்கலத்தின் அடியில் மறைவிலிருக்கின்றது கிடைக்கும்.

உ. கூ. நெம்பர்வரில் இரும்பு சாமான்கள் உதயராசி தனுசாகில் தன்னு டன் கூட்டாளியா யிருப்பவன் இரண்டு கருத்த நிறமுள்ள ஆள்களைக் கொண்டு அபகரித்து கிணத்திற் போட்டிருக்கின்ருன் இது கிடைப்பது மெத்தவும் கஷ் டம். இரண்டாம் பாதமாகில் மூங்கில் தன் அண்டைக் கிராமத்திலுள்ள பஞ் சம குலத்தோர்கள் ஐந்து பேர் கூடி அபகரித்து தங்கள் சேரியில் பத்திரப்படுத் தியிருக்கின்ருர்கள் இரண்டு மாதத்திற்குள் கிடைக்கும். மூன்ருெம் பாதமாகில் கருங்கல்லுகள் தன் குடிகளே அபகரித்து தூரவில் போட்டிருக்கின்ருர்கள் இது ஆறுமாதத்திற்குள் கிடைக்கும். நான்காம் பாதமாகில் தேக்கமரத்துண்டுகள் வடக்கு திக்கு கிராமாதிகாரி தன்பேரில் விரோதத்தால் தன் பண்ணையாள்களைக் கொண்டு அபகரித்து மாட்டுத் தொழுவத்தில் அக்கினி மூலையில் வைத்திருக் கின்ருன். அவனுடன் கலந்து முன்போல நேசஞ் செய்யச் கிடைக்கும் இல்லா விடில் கிடைப்பது மெத்தவும் அரிது.

உ. ம. நெம்பர்வரில் நீலச்சாலுவை அல்லது நீலச் சகலாத்து உதயராசி மகரமாகில் நிறம் செகப்பும நெட்டையுமாகிய தன் வண்டிக்காரன் அபகரித்து தன் மனிதரால் அன்னிய தேசத்தில் விற்பனை செய்து விட்டான் முயற்சி செய்யக்கிடைக்கும். இரண்டாம் பாதமாகில் நீலமணிகளுடன் சேர்ந்த பொன் சவரன் இடது கைபெருவிரல் யீனமாகிய கருத்த மனிதனிடம் அகப்பட்டு அட வுவைத்திருக்கிருன் என்ன பிரயத்தினஞ் செய்தபோதிலும் பொருள் நஷ்டமே யொழிய கைகூடி வரமாட்டாது. மூன்ருெம் பாதமாகில் கம்பு அல்லது தினை

யரிசி பண்ணைக்காரன் அபகரித்து நாளாவட்டத்தில் சாப்பிட்டான் மிஞ்சுகொஞ்ச மிருக்கின்றது கிடைக்கமாட்டாது. நான்காம் பாதமாகில் கொள்ளு அல்லது பயித்தம் பயிரு இதைச் சோரர்கள் அபகரித்துப் போயினுர்கள் இது கிடைக்க மாட்டாது.

உ. கக. செம்பர்வரில் எள்ளு அல்லது கொள்ளு தன்னினத்தில் ஓரைக் கண்ணன் அபகரித்தான் இது கிடைக்கமாட்டாது. இரண்டாம் பாதமாகில் ஜீவனைப்பற்றிய விவகாரம் இதை விரோதிகள் கொண்டுபோனுர்கள் அது விஷயத்தைப்பற்றி உடனே போவிடி வரும். மூன்றாம் பாதமாகில் பள்ளையாடு இது அருகாகத் தன்னிடமிருக்குமவனே அபகரித்து தெற்கே யனுப்பியிருப்பதால் வடதிக்கிலிருந்து மூன்றுவாரம் அல்லது மூன்று மாதத்திற்குள் அகப்படும். நான்காம்பாதமாகில் வரகு அல்லது கேழ்வரகு இத் தானியத்தை தாயாதிகளில் ஒருவன் அபகரித்துத் தன்னுடைய தானியத்துடன் கலந்து விக்கிரயஞ்செய்து விடுவான் இது கிடைக்கமாட்டாது.

உ. கஉ. செம்பர்வரில் நஷ்டமானபொருள் கல் கட்டடத்துடன் கூடிய பொன்னட்டிகை உதயருசி மீனமாகில் தன்னினத்திலே மாணிறமுடைய நெட்டையான மனிதன் அபகரித்தான் அது இரண்டுவாரம் அல்லது இரண்டு மாதத்திற் கிடைக்கும் இரண்டாம் பாதமாகில் சவரமாலை யிதை நெட்டையுங் குட்டையுமில்லாத சமவுயரமுடைய புருடனும் முகத்தில் காயவடிவுள்ள செவந்நிறமுடைய பெண்பிள்ளையுமா யிருவரும் அபகரித்து புருடனிடமே யிருக்கின்றது ஒரு வாரத்திற்குள் அல்லது ஒரு மாதத்திற்குள் அவர்களிருவருக்குங் கலகம் நேரிட்டுப் போலீசார் மூலமாய் வெகு பிரயாசையுடன் கிடைக்கும். மூன்றாம் பாதமாகில் பையோடுங்கூடிய ரொக்கம் ரூபாய்கள் நஷ்டம் அதை குளத்தின் படியில் வைத்து குளித்துக் கொண்டிருக்க தண்ணீருக்குவந்த கருத்தநிறமுடைய குள்ளப்பெண் ணபகரித்துப் போயினுள் இது கிடைக்கமாட்டாது நான்காம் பாதமாகில் நஷ்டமானபொருள் காலில் தரிக்கும் வெள்ளிப்பாடகம் அல்லது கெட்டிகொலுசு அன்றி கெஜ்ஜை கொலுசு இதைப் பெரும்பாலும் தன்னுடன் ஓரிலையில் சாப்பிடாத குறையையுடைய சினேகிதத்துரோகி யபகரித்து வடக்குத் திக்கில் பிரவேசிக்கும் நதிக்கரையில் புதைத்து வைத்திருக்கின்றுன் அவன் மிகு சமர்த்தனும் வெல்வாயனுமானதால் கிடைப்பது அரிதேயாம்.

ங. க. செம்பர்வரில் செகப்பும் வெள்ளையுமான பட்டைப் பசு உதயருசி மேஷமாகில் இதை தன்னூர் குடியானவன் அபகரித்து அன்னிய கிருமத்தில் கொடுக்க அவன் கொண்டு போய் நிருதி மூலையிலுள்ள சந்தையில் விற்பனைக்குக் கொண்டு போக போலீசார் கையில் அகப்பட்டு விசாரணைசெய்து அவர்கள் மூலியமாய் பக்ஷம் ஒன்றில் அல்லது ஒரு மாதத்திற்குள் கிடைக்கும். இரண்டாம் பாதமாகில் கெம்புக்கல் கட்டிய கடுக்கன் இதைத் தன் சொந்த மனிதன்

அபகரித்துக் கொண்டு மேற்கு திக்கிற் சென்று இரண்டு சினேகிதரிடமிருக்கின்றான் சில நாளில் சமாச்சாரம் வரும் கிடைக்கமாட்டாது. மூன்றாம் பாதமாகில் செம்பும் புஷ்பராகமுங் கலந்த மோதிரம் இதைத் தன் கணவன் தாயாதிகளுக்குக் கொடுத்து விட்டார் கிடைக்கமாட்டாது. நான்காம் பாதமாகில் பொன்மோபபுவைத்த கருமணி வளையல் இது தன் சக்காளத்தி யபகரித்து தாய்வீட்டிககுக் கொடுத்தனுப்பினள் எத்தனை பிரயத்தினஞ் செய்திடினுங் கிடைக்கமாட்டாது.

௧. ௨. நெம்பர்வரில் ரவைமோதிரம் உதயராசி ரிஷபமாகில் தன் கணவன் யெடுத்து வைப்பாட்டிக்குக் கொடுத்து விட்டார். இரண்டாம் பாதமாகில் முத்துகொப்பு இதை வீட்டுவேலைக்காரிஅபகரித்து தவிட்டுப்பானையில் ஈசானிய மூலையில் வைத்திருக்கின்றாள். இது மூன்றாம் மாதம் அல்லது மூன்று வாரத்தில் கிடைக்கும். மூன்றாம் பாதமாகில் வெள்ளைச் சாலுவை அல்லது வெள்ளை சகலாத்து இதைத் தன் சகோதரன் எடுத்து நண்பனுக்குக் கொடுத்துவிட்டான் இது கிடைக்கமாட்டாது. நான்காம் பாதமாகில் வெள்ளி ஒட்டியாணம் இது கிணத்தின் கரையில் வைத்து மறந்துவிட வேலைக்காரி யெடுத்து அக்கினி மூலையில் புதைத்துவைத்திருக்கின்றாள் பிரயத்தினஞ் செய்யக்கிடைக்கும்.

௧. ௩. நெம்பர்வரில் ருதுவான கன்னிகையைக் காணாமை உதையராசி மிதுனமாகில் தன் வீட்டிற்கு வருத்துப்போக்காயிருந்த செவந்தநிறமுடையகுள்ளன் அழைத்துக்கொண்டு தென்மேற்காகப்போய் நிருதிமூலையிலுள்ள ஓர் வீட்டில் வைத்துச் சுகமாயிருக்கின்றான் அவர்கள் ஒருவாரம் அல்லது ஒரு மாதத்திற்குள் ளகப்படுவார்கள். இரண்டாம் பாதமாகில் யெவ்வன புருடன் வயதுகடந்த வனிதையின் மோகத்தில் அவளழைக்கப் பின்சென்று வாயுமூலையில் ஒரு வீட்டில் சுகமாயிருக்கின்றாள் அப்புருஷன் ஆறுவாரம் அல்லதுஆறுமாதத்தில் வந்து சேருவான். மூன்றாம் பாதமாகில் சகோதரன் களத்திரத்தைக் காணாமை அப்பெண் மறுகிராமத்திலிருக்கும் வாலிபனுடன் கூடி நிருதிமூலையில் சுகமேயிருக்கின்றாள் அவள் கிடைப்பது மிகவும் அரிது. நான்காம் பாதமாகில் குதிரை மாதவன் சுயேச்சைகொண்டு ஆண் குதிரையுடன் கூடி மலைச்சாரலில் மேய்ந்துக்கொண்டிருக்கின்றது.

௧. ௪. நெம்பர்வரில் கோதுமை மூட்டை உதயராசி கடகமாகில் கருப்பு நிறமுள்ள கூலியாள் அபகரித்தான் இது போலீசார் மூலமாக ஒரு வாரத்தில் கிடைக்கும். இரண்டாம் பாதமாகில் பெண்பிள்ளைத் தாயத்துகள் கோவை இதை மாமியாரெடுத்து ஏழையாயிருக்கும் தன்னிரண்டாம் புதல்வனுக்கு கொடுத்து விட்டாள் இது கிடைக்கமாட்டாது. மூன்றாம் பாதமாகில் பொன்னொட்டியாணம் இதை வெள்ளை கருப்பு செகப்பு நிறமுள்ள பலவித ஆடைகள் வியாபாரஞ்செய்யும் பூணூல் தரித்த வைசியன் அபகரித்து உருக்கிவிட்டான் சடையுமில்லாததால் கிடைப்பதரிது. நான்காம் பாதமாகில் சிகாமோதிரம் இதைக்கள்ள

சாவிகொண்டு அலமாரியைத்திறந்து பூணூல் தரித்த பிராமணன் அபகரித்துக் கொண்டான் பிரயத்தினஞ் செய்யக்கிடைக்கும்.

௫. ௫. நெம்பர்வரில் வெள்ளிச் சாவிசங்கிலி உதயருசி சிங்கமாகில் இது மறதியால் வைத்துப்போக பந்துவி லொருவன் எடுத்து வைத்துக்கொண்டிருக்கின்றான் பரியாசத்துக்கெனும் அலையப்படுத்திக் கொடுத்துவிடுவான். இரண்டாம் பாதமாகில் வெள்ளிச்சொம்பு அல்லது சந்தனக்கிண்ணம் இதை பிரயாசனத்திற்கு வந்திருந்த கசடனும் அவன் மனையாளும் அபகரித்துக்கொண்டு போனார்கள் அது நான்குவாரம் அல்லது நான்கு மாதத்தில் கிடைக்கும். மூன்றாம் பாதமாகில் படிகமணிக்கோர்வை இது பூணூல் தரித்த செவந்த மனிதன் அபகரித்துக் கொண்டரான் கிடைக்கமாட்டாது. நான்காம பாதமாகில் வெள்ளிகைகை அங்க வஸ்திரம் இதைக் கள்ளன் அபகரித்துப் போயினன் கிடைக்கமாட்டாது.

௫. ௬. நெம்பர்வரில் துவரை மூட்டை உதயருசி கன்னியாகில் இதைத் தன்னிடமிருக்கும் குமஸ்தா கூலியாள்களால் வியாபாரியிடத்திற் கனுப்பிப் பணத்தைப் பெற்றுக் கொண்டான் இது ஆறுவாரம் அல்லது ஆறுமாதத்திற்குள் வகப்படும். இரண்டாம் பாதமாகில் செகப்புக்கொடை இது கிடைக்கப்படாது. மூன்றும் பாதமாகில் பட்டுக்கரை வேஷ்டி இது சகோதரன் கட்டிக்கொண்டு போயிருக்கின்றான் மூன்று நாள் அல்லது மூன்று வாரத்தில் கிடைக்கும். நான்காம் பாதமாகில் செகப்பு நிறமுடைய செந்தூரமென்னும் அவிழ்தம் சீசாவுடனளவு இதை விரோதியொருவன் அபகரித்துக் கொண்டுபோய் பூமியில் சீசாவுடன் கொட்டிப் பாழாக்கினன் இது கிடைக்கமாட்டாது.

௫. ௭. நெம்பர்வரில் பச்சைபில்லை வைத்துக்கட்டிய சடைப்பில்லை உதயருசி துலாமாகில் அன்னியதேசத்திலிருந்து தன்வீட்டிற்கு விருந்தாகவந்த சாந்த பந்துவான ஓர் பெண்பிள்ளை அபகரீத்துக் கொண்டாள் இதற்கு முயற்சி தடக் கிடைக்கும். இரண்டாம் பாதமாகில் பச்சைக்கல்லும் பச்சைபில்லைகளும் வைத்துக்கட்டிய பெண்பிள்ளை தாயித்துகள் இதை கருத்த நிறமுடைய கன்னிகையெடுத்து தன் தாய்தந்தைகளிடங் கொடுக்க தந்தை பத்திரப்படுத்தியிருக்கின்றான் அவன் இராசாங்க உத்தியோகஸ்தனுதலால் கிடைப்பது மெத்தவும் அருமை. மூன்றும் பாதமாகில் வாலில் பச்சை யிரகுகள் பொருந்திய செகப்புசாவல் இதை ஒரு குடியானவன் தன் கொல்லையிலுள்ள கீரை முளைகளைத் தின்றதென்று கல்லினலடிக்க அவ்வடிபட்டு உயிர்விட்டது அதை யவனெடுத்து சமைத்து சாப்பிட்டுவிட்டான் இந்த களவு கண்டறிவது கஷ்டம். நான்காம் பாதமாகில் சித்திரமெழுதியபொம்மை இதைகூட விளையாடிக்கொண்டிருந்தசிறு பெண் குழந்தை அபகரித்துப் போயிற்று இது ஒரு வாரத்திற்குள் கிடைக்கும்.

௫. ௮ நெம்பர்வரில் வெள்ளி அரைஞான்கொடி உதயராசி விருச்சிகமாகில் தன் சொந்தபந்துவில் கருப்புநிறமும் ஆறு விரலுமுள்ள மனிதன் கடலைச்

காறை பிள்ளைக்குக் கொடுத்து நயவார்த்தைகள்சொல்லி ஷை கொடியை அவிழ்த் துக்கொண்டான் இது கிடைக்கமாட்டாது. இரண்டாம் பாதமாகில் செகப்புமணி களுடன் சவரன் கோர்த்தமாலை இதை குழந்தை கழுத்திலிருந்து கள்ளன் அ த்துக்கொண்டு போயினான் இது கிடைப்பதரிது. மூன்றும் பாதமாகில் மு தும் பவழமும் சேர்த்துக் கோர்த்தமாலை இதைக் கழட்டிவைக்கப் பரந்தடித்து கொண்டு போயிற்று. நான்காம் பாதமாகில் ஈயக்கட்டிகள் இதைத் தன் தாயா யெடுத்து விக்கிரயஞ் செய்துவிட்டாள் அகப்படமாட்டாது.

௯. க. நெம்பர்வரில் உஞ்சலுக்குப்போடும் கனத்த பித்தளைச் சங்கி உதையருசி தனுசாகில் கருத்த நிறமும் முன்பல்லிரண்டும் பெருத்த கூன அபகரித்தான் அதுஒருவாரம் அல்லது பக்ஷமொன்றில் அகப்படும். இரண்டா பாதமாகில் இரும்புபணை இதை குள்ளமும் ஒரு கால் நொண்டியுமான கருப்ப அபகரித்தான் இது ஒருமாதத்திற்குள் கிடைக்கும். மூன்றும் பாதமாகில் க வேலமரத்துண்டுகள் இதை தன்னிடம் பண்ணைத்தொழில் செய்யும் பஞ்சம அபகரித்தான் அது ஈசானிய மூலையிலிருந்து ஒரு மாதத்திற்குள் கிடைக்கு நான்காம் பாதமாகில் பனம்பட்டை வலிச்சல்கள் இதை விரோதியான அடுத் கிருமத்தான் அபகரித்தான் இது கிடைப்பது மெத்தகஷ்டம்.

௯. ம. நெம்பர்வரில் நீலமணிக் கோர்வையுடன் சேர்ந்த பொன்காசு பொட்டு உதயருசி மகரமாகில் இக்கோர்வை யறுந்து பூமியில் சிதறிப் பொட் ஒரு கைம்பெண்ணிட மகப்பட்டது விக்கிறயத்துக்கு வரும்போது இரண்டுமா த்தில் கிடைக்கும். இரண்டாம் பாதமாகில் நீலச்சாயப்புடவைகள் இது சோ கள் அபகரித்தார்கள் ஒரு பக்ஷம் அல்லது ஒரு மாதத்திற்குள் கிடைக்கும். மூ றும் பாதமாகில் கடலைக்காய் மூட்டை இதை முகத்தில் படுகுறியுள்ள மனித அபகரித்தான் போலீசார் மூலயாய் கிடைக்கும். நான்காம் பாதமாகில் புளிய பழம் இதை சிறுவர்களிருவர் அபகரித்தார்கள் இது உடனே கிடைக்கும்.

௯. கக. நெம்பர்வரில் கடலைமூட்டை உதயருசி கும்பமாகில் பஞ்சமன் அபகரித்துப் பழங்கலத்தில் கொட்டி வைத்திருக்கின்றான் பிரயத்தனஞ்செய்ய க்கிடைக்கும். இரண்டாம் பாதமாகில் அரிநெல்லிக்காய்மணி இதைத் தன்வீட் டிற்கு நிருதிமூலையிலுள்ள யிடிந்த வீட்டுப் பெண்பிள்ளை அபகரித்து தண்ணீர் குடத்தில் போட்டிருக்கின்றாள் முயற்சிக்கக்கிடைக்கும். மூன்றும் பாதமாகில் வெள்ளைப் புள்ளியுள்ள பன்றி யிது வாயுமூலையில் சதாகள்ளி புதரிற்குள் தண் ணீருள்ள பள்ளத்தில் படுத்திருக்கின்றது. நான்காம் பாதமாகில் எருமை மாடு இதை அன்னியநாட்டுக் குடியானவன் பிடித்துத் தன்னூருக்குக் கொண்டுபோய் குளத்திற் கருகாக நாணற் புல் புதரில் கட்டிவைத்திருக்கின்றான் அவ்வூர் அதி காரியினால் பிடிக்கப்பட்டு ராசாங்க மூலமாய் கிடைக்கும்.

௩. ௧௨. செம்பர்வரில் செம்பு ஜம்புல் உதயருசி மீனமாகில் அபகரித்த வன் தன்மைத்துனன் ஒருவாரத்தில் அல்லது ஒரு மாதத்திற்குள் கிடைக்கும். இரண்டாம் பாதமாகில் மயிர் மாட்டி இதை கருத்த கைம்பெண் அபகரித்து பெட்டியில் வைத்திருக்கின்றாள். பிரயத்தினப் பட்டால் வெகு பிரயாசையில் கிடைக்கும். மூன்றாம் பாதமாகில் கைகாப்பு இதை பொருள் மிகுந்தவன் மனைவி யபகரித்தாள் இது எத்தனை முயற்சிசெய்யினும் பொருள் நஷ்டமும் பிரயாசையும் அவமானமும் நேரிடுமேயல்லது கைகூடிவர மாட்டாது. நான்காம்பாதமாகில் முடக்குமோதிரம் இதையருகில் படுத்திருந்த பெண்பிள்ளை யபகரித்தாள் இது கிடைக்கமாட்டாது.

௪. ௧. செம்பர்வரில் செகப்பு வெள்ளை பச்சை மூன்று ரத்தினங்கள்வைத்திழைத்த ரத்தினபில்லை உதையருசி மேஷமாகில் இதைத் தன் சட்டகனபகரித்து நெல்களஞ்சியத்தில் வைத்திருக்கின்றான் இதற்குத்தக்க பிரயத்தினஞ் செய்ய மூன்றுவாரம் அல்லது மூன்று மாதத்திற் கிடைக்கும். இரண்டாம்பாதமாகில் செம்பிழைத்த கம்மல் இதைத் தன் குமாரன் எடுத்து விக்கிரயஞ்செய்து வீண் சிலவிட்டான். மூன்றாம் பாதமாகில் ஒரே செம்புக் கட்டமானமோதிரம் இதை ஓர் குடியானவன் அபகரித்தான் இது கிடைக்கமாட்டாது. நான்காம் பாதமாகில் தும்பைக்காய் கொலுசு இதை வீட்டுவேலைக்காரி அபகரித்து தன் ஊருக்கு மனிதரிடங் கொடுத்தனுப்பினாள் இது ஐந்து நாள் அல்லது ஒருபக்ஷத்தில் கிடைக்கும்.

௪. ௨. செம்பர்வரில் யாளிமுகம் வைத்த காப்பு உதையருசி ரிஷபமாகில் தன்மனையாளெடுத்து கள்ளபுருஷனுக்குக் கொடுத்தாள் இது கிடைக்கமாட்டாது. இரண்டாம் பாதமாகில் செம்புகர்னப்பூ இதை மாலைக்கண்ணன் அபகரித்து விக்கிறையத்துக்கு கொடுத்திருக்கின்றான் இது ஒருவாரம் அல்லது ஒரு மாதத்திற்குள் கிடைக்கும். மூன்றாம் பாதமாகில் வெள்ளிச்சரிகைத்லைகுட்டை இதை உயரமும் செகப்புமுடைய புருஷன் அபகரித்து எல்லைதாண்டியனுப்பினான் இது கிடைக்கமாட்டாது. நான்காம் பாதமாகில் வெள்ளிச்சரிகை துப்பட்டா இதை வண்ணான் அபகரித்துக்கொண்டான் இது யிரண்டுவாரம் அல்லது யிரண்டு பட்சத்திற்குள் கிடைக்கும்.

௪. ௩. செம்பர்வரில் தன் சகோதரன் பெண்ணைப்பற்றிய விவகாரம் உதயருசி மிதுனமாகில் இப்பெண்வீட்டில் தாயார்செய்யும் இம்சையைத் தாளாமல் குளத்தில் விழுந்தேனும் பிராணனை விட்டுவிடலாமென்று நடு ராத்திரியிலெழுந்து போகும் மார்க்கத்தில் ஒரு புருஷன்கண்டு அழைத்துக்கொண்டுபோய் மேற்கே வாய்வுமூலையில் சுகமே யிருக்கின்றாள் ஆறுவாரம் அல்லது ஆறுமாதத்தில் கிடைப்பார்கள். இரண்டாம் பாதமாகில் புருஷன் வைப்பாட்டிவீட்டி லிருக்கின்றான் ஒருவாரம் அல்லது ஒருபக்ஷத்தில் வருவான். மூன்றாம் பாதமாகில் மரு

மனையைக்காணுமல் அப்பெண் தனித்துத் தாய்வீடுசேர்ந்தாள் உடனே சமாச்சாரம் வரும். நான்காம் பாதமாகில் பெண்குழந்தை திசைதப்பி தன் கடையேசெல் லக் குடியானவன் கண்டு தன்வீட்டுக் கழைத்துப்போய் வைத்திருக்கின்றான்இது இரண்டுநாழிகை அல்லது இரண்டுநாளில் கிடைக்கும்.

ச. ச. செம்பர்வரில் அரிசிமூட்டை உதயராசி கடகமாகில் கருப்பு நிற முள்ள குள்ளனும் மாநிறமாய் உயரமுள்ளவனும் அபகரித்துப் பங்கிட்டுக் கொ ண்டார்கள் இதுகூடிய சீக்கிரத்தில் பேர்கள் அகப்படுவார்கள். இரண்டாம் பாத மாகில் அரைச்சவறன்கள் இதைத் தன்மைத்துனி அபகரித்தாள் இது உடனே கிடைக்கும். மூன்றும் பாதமாகில் பொன்குஞ்சி மணி சிலங்கை இதைத்திரு டன் அபகரித்தான் இது கிடைக்கமாட்டாது. நான்காம் பாதமாகில் பவித்திர மோதிரம் இதைப் பூணூல் தரித்த கருப்பன் அபகரித்தான் இது நாலுவாரம் அல்லது நாலு பக்ஷத்தில் கிடைக்கும்.

ச. ரு. செம்பர்வரில் பொன்கடியாரச் சங்கிலி உதயராசி சிங்கமாகில்தன் பங்காளி வர்க்கத்தில் முகத்தில் வெட்டுக்குறியுள்ள மனிதன் அபகரித்தான் இது ஒருநாள் அல்லது ஒருவாரத்திற்குள் கிடைக்கும். இரண்டாம் பாதமாகில்பொன் கிலிட்டுசெய்த பன்னீர்சொம்பு இதை வீட்டு வேலைக்காரன் அபகரித்துப்புழைக் கடையில் பூஞ்செடிக்கீழ் புதைத்து வைத்திருக்கின்றான் இது ஒரு பக்ஷம் அல்ல து ஒருமாதத்திற்குள் வெளியாகி கிடைக்கும். மூன்றும் பாதமாகில் பாஜிபந்த இதை தன் மைத்துனன்பிள்ளை அபகரித்தான் இது நாலுவாரம் அல்லது நாலு பக்ஷத்தில் பிரயாசையுடன் கிடைக்கும். நான்காம் பாதமாகில் வெள்ளிச்சரிகை சேலை இதைச்செவிடன் அபகரித்து அடகுவைத்திருக்கின்றான் இது ஒருபெண் மூலமாய் கிடைக்கும்.

ச. சு. செம்பர்வரில் செப்புஅண்டா உதயராசி கன்னியாகில் சோரன் யெடுத்துப்போயினன் இதுகிடைக்காது. இரண்டாம்பாதமாகில் காசிப்புடவை இதைத்தன்னினத்தாரில் ஒருகைம்பெண் அபகரித்து பத்திரப்படுத்தி யிருக்கின் றாள் இது ஆறுவாரம் அல்லதுஆறுமாதத்தில் அகப்படும். மூன்றும்பாதமாகில் பட்டுசித்தாடை இதைஓர் குடுகுடுப்புக்காரன் அபகரித்தான் இது கிடைக்கமாட் டாது. நான்காம்பாதமாகில் கீல்காப்பு றவிக்கை ஒருவனிதை இதையபகரித்து விற்பனைசெய்து விட்டாள் இது கிடைக்கமாட்டாது.

ச. எ. செம்பர்வரில் நல்பச்சை முருகு உதயராசி மூலமாகில் தாயாதி அபகரித்தான் விச்சிறையத்திற்குக் கொண்டுபோக போலீசார்மூலமா யகப்படும். இறண்டாம்பாதமாகில் பட்டைதீர்த்த பச்சைக்கல் பொதிந்த அட்டிகை இது அப ஹரித்தவள் வெகுநாள் திருட்டுக்கள்ளியானதால் யிது மெத்தப் பிறயாசையால் கிடைக்கும். மூன்றும்பாதமாகில் மயிலிறகினல் சமைத்த விசிறி இதை உதட்டு க்கு வெளிப்பட்ட பல்லையுடைய மனிதன் அபகரித்தான் இது ஒருநாளுக்குள் கிடைக்கும். நான்காம்பாதமாகில் பச்சைப்புடவை இதைக்கள்ளன் அபகரித்துக் கொண்டுபோனான் இது கிடைக்கமாட்டாது.

ச. அ. நெம்பர்வரில் வெள்ளிக்குஞ்சும்மணி சிலங்கை உதயராசி விருச்சிக மாகில் கள்ளன் அபகரித்துக்கொண்டு பிள்ளையை கண்ணுக்கெட்டாத தூரத்தில் விட்டுப்போயினன் இது கிடைக்கமாட்டாது. இரண்டாம் பாதமாகில் செகப்புப் பட்டு கயிரில்கோர்த்த பொன் கோதுமைமணி இதை அடுத்தவீட்டு பெண்பிள்ளை அபகரித்து அடுப்பங்கரையில் புதைத்து வைத்திருக்கின்றாள் இது நாலுவாரம் அல்லது நாலுமாதத்திற்குள் கிடைக்கும். மூன்றும்பாதமாகில் செம்புமணி மாலை இதை கைமறதியால் வைக்கப்பட்ட யிடத்தில்தானே யிருக்கின்றது பரிசோதிக்கக் கிடைக்கும். நான்காம் பாதமாகில் காரீயக்கட்டி இதை சிறுபெண் அபகரித்து தந்தையிடங் கொடுக்க அவன் விக்கிறையஞ் செய்துவிட்டான் இது கிடைக்கமாட்டாது.

ச. க. நெம்பர்வரில் பொன் பொத்தான் உதயராசி தனுசாகில் வண்ணனபகரித்தான் இது ஒரு பட்சத்தில் கிடைக்கும். இரண்டாம் பாதமாகில் பித்தளைத் தவலை இதை வாய்கோணலும் கருத்த நிறமுமுள்ள ஓர் புருடன் அபகரித்தான் இது யிரண்டு மாதத்திற்குள் வெளிப்படும். மூன்றும் பாதமாகில் சவுக்கு மரத்துண்டுகள் இதை விரோதியானவன் தன் பண்ணையாள் களைக்கொண்டு அபகரித்து தன்னிடமிருக்கும் சவுக்குமரத் துண்டுகளுடன் கலந்து விட்டான் இது கிடைப்பது மிகவுங் கடினம். நான்காம்பாதமாகில் தேக்கன் வலைச்சல்கள் இதை நீருதிமூலை கிராமத்திலிருப்பவன் அபகரித்து மாட்டுத் தொழுவத்தில் வைத்திருக்கிறான் இது மூன்றுவாரம் அல்லது மூன்று பட்சத்தில் அகப்படும் பார்த்த போதிலும் திரவிய நஷ்டத்துடன் மிகவும் பிரையாசையில் கிடைக்கும்.

ச. ய. நெம்பர்வரில் கருப்புப்பட்டு நூலில் கோர்த்த மணிக்கோர்வை உதயராசி மகரமாகில் இதை முகத்தில் அம்மைக்குறியுள்ள மாது அபகரித்தாள் இது கிடைப்பது கஷ்டம். இரண்டாம் பாதமாகில் நீலச்சாயம்தோய்த்த சேலை இதை பறந்தமுகமும் ஒருகாது தொள்ளையுமான பிச்சைக்காரன் அபகரித்து ஜீவனம் செய்துக்கொண்டான் இது கிடைக்கமாட்டாது. மூன்றும் பாதமாகில் கொத்தமல்லிமூட்டை இதை தன்வீட்டிற்கு மேலண்டைதிக்கு மனிதன் அபகரித்தான் இது யிரண்டுவாரம் அல்லது இரண்டு மாதத்தில் கிடைக்கும். நான்காம் பாதமாகில் மிளகாய்மூட்டை இதை ஒரு கூலியாளும் அவன் மனைவியுமாக அபகரித்தார்கள் இது ராஜாங்க மூலமாய் ஒருபட்சத்தில் கிடைக்கும்.

ச. கக. நெம்பர்வரில் வெல்லமூட்டை உதயராசி கும்பமாகில் தனக்கு சமான்மான குடியானவன் அபகரித்து தன் மூட்டைகளுடன் கலந்து விட்டான் இது கிடைப்பது மிகவும் அருமை. இரண்டாம் பாதமாகில் நகாஸ்வேலைசெய்த பொன் லட்சுமிப்பொட்டு இதை அருகில் படுத்திருந்த கள்ளி அபகரித்தாள் இது மூன்றுநாளில் கிடைக்கும். மூன்றும் பாதமாகில் கருங்கோழி இதைநான்காம் வீட்டுப் பெண்பிள்ளை பிடித்து உடைக்குள் கவிழ்த்திருக்கின்றாள் இது கிடைக்

கமாட்டாது. நான்காம் பாதமாகில் கழுதை ஈசானியமூலையிலுள்ள குட்டிச்சுவரின் மறைவில் மேய்ந்துக்கொண்டிருக்கின்றது.

ச. கக. செம்பர்வரி கத்திரிப்பாவல் உதயருசி மீனமாகில் தன்வேலைக்காரி அல்லது மருமகள் அபகரித்தாள் இது ஐந்துநாள் அல்லது ஒருபட்சத்தில் கிடைக்கும். இரண்டாம் பாதமாகில் ஒத்தைப்பேட்டை மூந்நூல் இதை ஒரு கண்ணில் பூப்பட்ட மனிதன் அபகரித்தான் இது எட்டுநாளில்கிடைக்கும். மூன்றாம் பாதமாகில் யாளிமுகம்வைத்த காப்பு இதை முருக்கு மீசையும் பெருத்த தேகமுமுடைய மனிதன் அபகரித்தான் இது அதிக கஷ்டத்தின்பேரில் ஆறு மாதத்திற்குள் கிடைக்கும். நான்காம் பாதமாகில் உருட்டுமோதிரம் இது நடை மார்க்கத்தில் நழுவிப்போக கருத்தமனிதனிடம் கிடைத்தது இது கிடைக்கமாட்டாது.

ரு. க. செம்பர்வரில் பொன்குச்சுக்குப்பி உதயருசி மேஷமாகில் தன் வீட்டுப் பிரயோஜனத்திற்குவந்த செட்டையானவள் அபகரித்தாள் பிரயத்தினஞ் செய்தால் மூன்றுவாரம் அல்லது மூன்று மாதத்திற்குள் கிடைக்கும் · இரண்டாம் பாதமாகில் ரவைக்கம்மல் இதை வெகுநாளாய் திருடிக்கொண்டிருந்தகள்ளி அபகரித்தாள் இது ஒருவாரத்திற்குள் கிடைக்கும். மூன்றாம் பாதமாகில் புஷ்பராகக்கல் கட்டிய தம்பாக்கு மோதிரம் இதைமிக்க அழகுள்ள முகத்தையுடைய கன்னிகை அபகரித்தாள் இது கிடைக்கமாட்டாது. நான்காம் பாதமாகில் வெள்ளி டம்ளர் இதை வேலைக்காரன் அபகரித்தான் இது மூன்று நாளில் கிடைக்கும்.

ரு. உ. செம்பர்வரில் நகாசுவேலைசெய்து யாளிமுகம்வைத்த பொன்காப்பு உதயருசி ரிஷபமாகில் தன்வீட்டிலிருக்கும் கருத்தவாலிபன் அபகரித்தான் இது கிடைக்கமாட்டாது. இரண்டாம் பாதமாகில் தருப்பு கர்னப்பூ இதை தன்னினத்திலுள்ள பெண் அபகரித்தாள் இது ஒருவாரத்தில் கிடைக்கும், மூன்றாம் பாதமாகில் வெள்ளிச்சரிகைச்சேலை இதை ஊழியக்காரன் அபகரித்தான் இது ஒருவாரம் அல்லது ஒருமாதத்திற்குள் கிடைக்கும். நான்காம் பாதமாகில் சரிகை பிட்டா ரவிக்கை இதை ஒருகிழவி அபகரித்தாள் இது யிரண்டு நாளில் கிடைக்கும்.

ரு. ௩. செம்பர்வரில் தன் மைத்துனி உதயருசி மிதுனமாகில் தென்திக்கைநோக்கி கருத்த புருஷனுடன் செல்கின்றாள் ஆறு மாதத்தில் கிடைப்பாள். இரண்டாம் பாதமாகில் உழவுமாடு இதை தூரதேசத்து லப்பை யொருவன் பிடித்துக்கொண்டு போயினன் இது யிரண்டுவாரம் அல்லது இரண்டு பட்சத்தில் வரும். மூன்றாம் பாதமாகில் ஏறுகுதிரை இது குடியானவன் கொல்லையில் மேய்ந்ததால் பிடித்து பட்டியிலடைத்தான். நான்காம் பாதமாகில் பசுவின் கன்று இது உடனே வரும்.

௫. ௪. நெம்பர்வரில் பச்சரிசி மூட்டை உதயருசி கடகமாகில் இதை படவுக்காரன் அபகரித்தான் உடனே கிடைக்கும் இரண்டாம் பாதமாகில் ஜிமிக்கை இதை அன்னிய தேசத்தான் வந்து அபகரித்துக்கொண்டு போயினன் இதற்கு பிரயத்தனஞ் செய்ய மூன்றுமாதத்தில் கிடைக்கும் மூன்றும் பாதமாகில் சவரன் வைத்தமோதிரம் இதை பூநூல் தரித்த க்ஷத்திரியன் அபகரித்தான் இது போலீஸ் மூலமாய்க் கிடைக்கும். நான்காம் பாதமாகில் பொன்னரைமூடி இதை கள்ளன் அபகரித்தான் இது அகப்படமாட்டாது.

௫. ௫. நெம்பர்வரில் பொன்கெடியாரம் உதயராசி சிங்கமாகில் சொந்த மனிதரே அபகரித்தார்கள் இது கிடைப்பது அரிது. இரண்டாம் பாதமாகில் கிலிட்டுசெய்தகூசா இதை ஒருகிழவன் அபகரித்தான் இது எட்டுநாளில் கிடைக்கும். மூன்றும் பாதமாகில் வங்கி இதை பொருளாளியொருவன் அபகரித்தான் இது பொருட்சிலவும் தேககஷ்டமும் நேரிடுமேதவிர கிடைப்பது அரிதேயாம். நான்காம்பாதமாகில் மதுரை குட்டை இதை வந்தவிருந்தாளி அபகரித்துப்போனன் இது இரண்டுமாதத்தில் கிடைக்கும்.

௫. ௬. நெம்பர்வரில் செப்புக்குடம் உதயருசி கன்னியாகில் நிருதிமூலையிலிருக்குஞ் செவிடன் அபகரித்தான் இது இரண்டுதினத்தில் வெளியாம் இரண்டாம் பாதமாகில் கொரனாட்டுச்சேலை இதை இரண்டுபேருடைய மனிதன் அபகரித்தான் இது கிடைப்பது அருமையேயாம். மூன்றும் பாதமாகில் மஞ்சளுஞ் சிகப்பு நிறமுமுடைய புடவை இதை கள்ளன் அபகரித்துபோனன்இது கிடைக்கமாட்டாது. நான்காம் பாதமாகில் பட்டுநிஜார் இதை வலது துடையில் காயவடிவுள்ள புருஷன் அபகரித்தான் இது கிடைக்கமாட்டாது.

௫. ௭. நெம்பர்வரில் பொன்கட்டடமாகிய பச்சைபுலாக்கு உதையருசி துலாமாகில் வைத்தயிடத்திலேயே நன்றாய் பரிசோதிக்கக் கிடைக்கும் இரண்டாம் பாதமாகில் பச்சை டம்ளர் இதுவேலைக்காரன் கைதவறி உடைத்துவிட்டது மூன்றும் பாதமாகில் வான்கோழி இதைக் கள்ளனபகரித்துப் போனன் இது அகப்படமாட்டாது. நான்காம் பாதமாகில் வெங்கலமணி இதைப் பரதேசி அபகரித்தான் இதுமூன்றுநாளில் கிடைக்கும்.

௫. ௮. நெம்பர்வரில் வெள்ளி அரைமூடி உதயருசி விருச்சிகமாகில் மூன்றும்வீட்டுக்காரி அபகரித்தாள் இது கிடைக்கமாட்டாது. இரண்டாம் பாதமாகில் இரண்டுபேட்டையுள்ள சரடு இதை மாநிறமுடைய உயர்ந்த பெண்பிள்ளை அபகரித்தாள் இது வெகு பிரயாசையில் கிடைக்கும். மூன்றும் பாதமாகில் பொன் கட்டடமாகிய ருத்திராக்ஷமாலை இதை ஒருகை கொஞ்சம் பின்னமானவன் அபகரித்தான் இது நாலுஜாமம் அல்லது நாலுநாளில் கிடைக்கும். நான்காம்பாதமாகில் துத்திநாகத்தகடு இதை யொருபெண்பிள்ளை அபகரித்தாள் இது கிடைக்கமாட்டாது

ஞி. க. நெம்பர்வரில் சவரன் ஒட்டிய பொத்தான் உதயராசி தனுசாகில் இருமார்க்கத்தில் விழுந்துபோயிற்று கிடைக்கமாட்டாது. இரண்டாம் பாதமாகில் பித்தளைகுண்டுபோணி இதை எதிர்வீட்டுமாது அபகரித்தாள் யிது ஒருமுகூர்த்தம் அல்லது ஒருநாளில் கிடைக்கும். மூன்றும் பாதமாகில் பனைமரத்துண்டுகள் இதை நிருதி மூலையிலுள்ள கிராமஸ்தன் அபகரித்தான் இது கிடைக்க மாட்டாது. நான்காம் பாதமாகில் மூங்கில் வலைச்சல்கள் இதை பஞ்சமனொருவன் அபகரித்துச் சேரியில் ஒளித்துவைத்திருக்கிறான் இது ஆறுவாரம் அல்லது ஆறுமாதத்திற்குள் கிடைக்கும்.

ஞி. ௰. நெம்பர்வரில் பொன்கம்பியினால் கோர்த்த துளசிமணி உதயராசி மகரமாகில் யிதை யிரண்டுகண்ணிலும் பூவிழுந்தமனிதன் அபகரித்தான் இது கிடைக்கமாட்டாது. இரண்டாம் பாதமாகில் நீலநெல்லிக்காய் மணிகோர்த்த மாலை இதையெப்போதும் சிரித்தமுகமாயிருக்கும் மனிதன் அபகரித்தான் யிது இரண்டு நாளில் கிடைக்கும். மூன்றும் பாதமாகில் சுக்குமூட்டை யிதை தனக்குச் சமானமான வர்த்தகன் அபகரித்தான் யிது கிடைக்கமாட்டாது. நான்காம் பாதமாகில் சித்தரத்தை மூட்டை யிதை தன்குமஸ்தா அபகரித்தான் யிது ஒருவாரம் அல்லது ஒருமாதத்திற் கிடைக்கும்.

ஞி. கக. நெம்பர்வரில் சர்க்கரைமூட்டை உதயராசி கும்பமாகில் இதை வெகுநாளாய் தன்னிடம் நம்பிக்கையாயிருந்த கும்ஸ்தா அபகரித்தான் இது கிடைக்கமாட்டாது. இரண்டாம் பாதமாகில் பொன்கம்பியினால் கட்டிய தாமரைமணிமாலை யிதைபிராமணன் அபகரித்தான் யிது கிடைப்பது அருமையே. மூன்றும்பாதமாகில் கருஞ்சாவல் யிதை கருப்புநிறமுள்ள வனிதை அபகரித்தாள் விக்கிறையத்துக்குவரும் அப்போது கிடைக்கும் நான்காம்பாதமாகில் பெட்டைநாய் யிது ஆண்நாயுடன் விளையாடிக்கொண்டிருக்கின்றது உடனே வரும்.

ஞி. கஉ. நெம்பர்வரில் செம்பும் தருப்பு மிழைத்தகம்மல் உதயராசி மீனமாகில் வண்டிக்காரன் அபகரித்தான் யிது ஐந்துநாள் அல்லது ஒரு பக்ஷத்தில் கிடைக்கும். இரண்டாம் பாதமாகில் மூன்றுபேட்டை சரடு யிதை யிடதுகண் பொட்டையான மனிதன் அபகரித்தான் யிது எட்டுநாளில் கிடைக்கும். மூன்றும் பாதமாகில் முழங்கைக்குமேல் போடுங்கடையம் யிதை மானிமும் குள்ளமுமான பெண்பிள்ளை அபகரித்தாள் யிது கிடைப்பதருமை. நான்காம்பாதமாகில் கால்சவரன் வைத்த மோதிரம் யிதை ஒருமனிதனும் வனிதையுமாகஅபகரித்தார்கள். யிது கிடைப்பதருமை.

சு. க. நெம்பர்வரில் செம்புவைத்திழைத்த சாமந்திபில்லை உதயராசி மேஷமாகில் கைதவறிப்போய்விட்டது இது கிடைக்கமாட்டாது இரண்டாம் பாதமாகில் தோடு இதைப் புதல்வன் எடுத்து பத்திரப்படுத்தியிருக்கிறான். மூன்றும் பாதமாகில் செம்புமூக்குத்தி இது மனையில்லாமல் தன்கடையே விழுந்து

விட்டது. இதுபரிசோதிக்க ஐந்துநாள் ஒருபக்ஷத்தில் கிடைக்கும் நான்காம் பாதமாகில் வெள்ளிக்கிண்ணம் இதை கூனன் அபகரித்தான் யிது மெத்தகஷ்டத்தில் வரும்.

சு. உ. நெம்பர்வரில் கோணவளையல் உதயராசி ரிஷபமாகில் மைத்துனன் அபகரித்து வைப்பாட்டிக்குக்கொடுத்தான் இதுகிடைப்பதரிது. இரண்டாம்பாதமாகில் குருட்டுப்பாவல் இதை சிறுபுதல்வன் அபகரித்து பத்திரப்படுத்தியிருக்கிறான் இதுமூன்றுநாளில் கிடைக்கும். மூன்றாம்பாதமாகில் கொட்டடிப்புடவை இதை மார்பில்மச்சமுடையவனிதை அபகரித்தாள் யிது மெத்த கடினத்தில் கிடைக்கும். நான்காம்பாதமாகில் காஞ்சிபுரத்துப் பட்டுக்கரைவேஷ்டி இதை முகத்தில் காயக்குறியுள்ள கைம்பெண் அபகரித்தாள் இது கிடைக்கமாட்டாது.

சு. ங. நெம்பர்வரில் தமயன்மனைவி உதயராசி மிதுனமாகில் அவ்வனிதை ஊரைவிட்டுப்போயினள் மறுபடிவரமாட்டாள். இரண்டாம் பாதமாகில் ஆட்டுக்கிடா இதை யொருயிடையன் அபகரித்துத் தன் கிடையில் சேர்த்தான் இது கிடைக்கமாட்டாது. மூன்றும் பாதமாகில் பாத்து யிதையொரு கிராதகன் அபகரித்தான் யிது கிடைக்கமாட்டாது. நான்காம்பாதமாகில் குதிரைக்குட்டி யிதைக் சிறுவர்கள் பிடித்துக்கொண்டு விளையாடுகிறார்கள் இது இரண்டுஜாமத்திற்குள் வரும்.

சு. ச. நெம்பர்வரில் புட்டரிசிமூட்டை உதயராசி கடகமாகில் யிதையிரண்டு ஸ்திரீகளும் ஒருபுருடனுமாக அபகரித்து பங்கிட்டுக்கொண்டார்களிது ஒருவாரத்திற்குள் கலகம் நேரிட்டுக்கிடைக்கும் இரண்டாம் பாதமாகில் கலசம்வைத்த கொப்பு யிதையொருகிழவன் அபகரித்தான் யிது மூன்றுநாளில் கிடைக்கும். மூன்றும் பாதமாகில் கெம்பு ரவை பச்சை நீலம் கோமேதகம் வைத்திழைத்த பவித்திர மோதிரம் இதை பல்லெடுப்பாயுள்ள விதவை ஸ்திரீ அபகரித்தாள் இது ஒருமண்டலத்திற்குள்ளாக அகப்படும் நான்காம்பாதமாகில் குழந்தை ஒட்டியாணம் யிதைக் கள்ளனபகரித்துப்போனன்.

சு. டு. நெம்பர்வரில் வெள்ளிக்கெடியாரம் உதயராசி சிங்கமாகில் யிதை தங்கவேனிகன் அபகரித்தான் யிதுமெத்தகடினத்தில் கிடைக்கும். இரண்டாம் பாதமாகில் வெங்கலகூஜா யிதைக்கருத்தமனிதன் அபகரித்தான் இது கிடைக்கமாட்டாது. மூன்றும்பாதமாகில் உத்திரஜஞ்சம் இதையபகரித்தவன் ராஜாங்க உத்தியோகஸ்தனுதலால் யிது ஒருவருடத்திற்குள் கிடைக்கும். நான்காம்பாதமாகில் காசிகுட்டை யிதை கள்ளன் அபகரித்தான் யிது கிடைப்பது மிகவும் அருமை.

சு. சு நெம்பர்வரில் செப்புதேக்ஸா உதயராசி கன்னியாகில் அக்கினி மூலையிலிருக்கும் குடியானவ னபகரித்தான் இதுகிடைக்கமாட்டாது இரண்டாம் பாதமாகில் உப்பர்டைச்சேலை இரண்டு ஸ்திரீகள்சேர்ந்து அபகரித்தார்கள் இது

ஒருவாரம் அல்லது ஒருபக்ஷத்திற்குள் கிடைக்கும் மூன்றும்பாதமாகில் பச்சை யும் செகப்புக்கரையுமுடையசேலை யிதையொரு கைம்பெண் அபகரித்தாள் யிது யிரண்டுபக்ஷம் அல்லது இரண்டுமாதத்தில் கிடைக்கும் நான்காம் பாதமாகில் பட்டுப்பாவாடை இதை யிரண்டுகோல் நொண்டியாகிய வனிதை அபகரித்தாள் இது கிடைப்பது அரிது.

ஙு. எ. நெம்பர்வரில் செம்பிழைத்த பிரடாகம்மல் உதயராசி துலாமா கில் யிதை தன்மருகி அபகரித்தாள் யிது உருவழிந்து பாதிகிடைக்கும் இரண் டாம் பாதமாகில் செம்பிழைத்த நத்து யிதை சொந்தமனிதரே அபகரித்தார்கள் யிது ஒருபட்சம் அல்லது ஒருமாதத்தில் கிடைக்கும் மூன்றும்பாதமாகில் ஜண்ட நாகம் இதைத் திருடன் அபகரித்தான் இது மெத்த கஷ்டத்தில்வரும் நான்காம் பாதமாகில் வெங்கலக்கிண்ணி யிதை ஒரு பஞ்சமஸ்திரீ அபகரித்தாள் யிது கிடைக்கமாட்டாது.

ஙு. அ. நெம்பர்வரில் வெள்ளி மைடப்பிஉதயராசி விருச்சிகமாகில்யிதை தன்பிள்ளைகள் விளையாட்டில மறந்துபோட்டுவிட்டார்கள் யிது கிடைக்கமாட் டாது யிரண்டாம்பாதமாகில் சாதா மோப்புவைத்த பொன்சரடு யிதை பல்லில் லாக்கிழவி அபகரித்தாள் யிதுமூன்றுவாரம் அல்லது மூன்றுமாதத்தில் கிடைக் கும் மூன்றும்பாதமாகில் சந்திராரம் யிதை ஒருகால் நொண்டி அபகரித்தான் யிதுமூன்றுஜாமம் அல்லது மூன்றுநாளில் கிடைக்கும் நான்காம்பாதமாகில் ... நாகக்கிண்ணி யிதை ரத்தக்கண்ணுடை மங்கை அபகரித்தாள் யிது கிடைக்க மாட்டாது.

